Registered as a NewsPaper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 22 06 - 08 - 1992 வியாழக்கிழமை ஓசை 170

## 1ஆம் தர அதிபர் நேர்முகப் பரீட்சை 17ஆம் திகதி நடைபெறும்

இலங்கை அதிபர் சேவையின் முதலாம் தர அதிபர் பதவிக்கு நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் மூலம், நேர்முகப் பரீட்சைக்காகத் தெரிவு செய்யப்பட்ட இருபத்தியொரு அதிபர்கள்பற்றி வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். இவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் எதிர்வரும் பதினேழாம் திகதியன்று முற்பகல் ஒன்பது மணியளவில் கொழும்பு பத்தரமுல்லவில் இருக்கும் கல்விச் சேவைகள் சபையில் நடைபெறவுள்ளது. குறிப்பிட்ட திகதியில் இவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு தவறாது சமுகம் அளிக்க வேண்டுமெனவும், அதற்கான பத்திரங்களை யாழ்ப்பாண கல்வித் (4 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் அதிரடி; 4 படையினர் பலி

## புலிகள் தரப்பில் சேதமில்லை

(மன்னார்)

**மன்னார் மாவட்டம் நானாட்டானில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துணிகர அதிரடித் தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.**

நேற்று அதிகாலை 5 35 மணியளவில் நானாட்டான் இராணுவ முகாமிலிருந்து 200 யார் தொலைவிலுள்ள பாடசாலைக்கு தடைகளை அகற்ற வந்த சுமார் பத்து இராணுவத்தினரே புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு உள்ளாகினர். புலிகள் மேற்கொண்ட இவ் அதிரடித்தாக்குதல் சுமார் ஐந்து நிமிடங்கள் வரை நீடித்தது இதில் நான்கு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மிகுதிப் பேர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர்.

புலிகள் மேற்கொண்ட இத் துணிகர தாக்குதலில் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்பது குறிட

[4 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

(மன்னார்)

நானாட்டானில் நேற்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிர+த் தாக்குதலில் பல நவீன ஆயுதங்களைக் கைப்பற்றினர். கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ★ ஏ. கே. எல். எம். ஜி | — | 01 |
| ★ ரி-81-1 ரக துப்பாக்கி | — | 02 |
| ★ ரி - 56 - 2 ரக துப்பாக்கி | — | 01 |
| ★ ஐ. எம். ரவைகள் | — | 240 |
| ★ ஏ கே. லிங்குடன் ரவைகள் | — | 330 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி. கோல்சர் | — | 01 |
| ★ ஏ. கே எல். எம் ஜி. மகசீன் | — | 01 |
| ★ ரி - 81 மகசீன் | — | 07 |
| ★ ரி - 56 மகசீன் | — | 03 |
| ★ ஏ. கே. கோல்சர் | — | 02 |
| ★ ஜெ ஆர். கிரனைட் | — | 02 |
| ★ செற் | — | 01 |
| ★ செற் பற்றி | — | 01 |
| ★ ரெயின் கோட் | — | 01 |
| ★ சப்பாத்து | — சோடி | 01 |
| ★ தண்ணீர்கான் கோல்சர் | — | 02 |

## பொலிஸ் கான்ஸ்டபிள் சடலமாக மீட்பு

(கொழும்பு)

பொலநறுவ பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிளான சாந்தகுமார ஓனகம காட்டில் சடலமாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த ஒருவார காலயாக காணாமல்போயிருந்தார் என்றும்' இவரது மரணம்தொடர்பாக விசாரணை நடத்திய

[4 ஆம் பக்கம் பார்க்க]

புலிகளின் தலைவர்கள் விவகாரம்

## இந்தியா இன்னமும் முடிவு செய்யவில்லையாம்

(கொழும்பு)

புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை நாடு கடத்துவது சம்பந்தமாக இலங்கையிடம் கோருவது பற்றி புதுடில்லி இன்னமும் முடிவு செய்யவில்லை என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் என். என். ஜா சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; ராஜீவ்காந்தி கொலை வழக்கை நடத்திவரும் விசேட பொலிஸ் குழுவினர் பதிவு செய்த வாக்குமூலங்களின் அடிப்படையில் பிரபாகரனை இந்தியாவுக்கு கொண்டுவர வேண்டியது பற்றி வெளிவிவகார அமைச்சுக்கு எடுத்துக் கூறியிருப்பதாகவும், ஆனால் இந்திய அரசு இது பற்றி இன்னமும் பூர்வாங்க வேண்டுகோள் எதையும் விடுக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

## கல்யாணராமனுடன் காங்கிரசிற்கு உறவு இல்லை

### காங்கிரஸ் கமிட்டி அறிவிப்பு

(டில்லி)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யபபடுவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ எந்தவொரு காலகட்டத்திலும் கல்யாணராமன் என்னும் பெயருடைய ஒருவர் காங்கிரஸ் அலுவலகம் எதிலும் வேலை செய்யவில்லை என்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி திட்டவட்டமாகக் கூறியுள்ளது

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்களில்ஒருவரான ஆதிரை என்பவர் சென்னை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கல்யாணராமனின் பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே

ஆனால் விசேட புலனாய்வு பணியகத்தை சேர்ந்த குழுவென்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் அலுவலகத்துக்கு விஜயம் செய்து விசாரணை செய்தபோது கல்யாணராமன் என்ற பெயரில் எவரும் எப்போதும் வேலை செய்யவில்லை என்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூறிவிட்டது

## தடுப்பு முகாமிலிருப்போரை 2 நாட்கள் சந்திக்கலாம்

(கொழும்பு)

தென்னிலங்கையிலுள்ள தடுப்பு முகாம்கள் மற்றும் சிறைச்சாலைகளில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் வட-கிழக்கு அரசியல் கைதிகளை கிழமையில் இரு நாட்கள் உறவினர்கள் சென்று பார்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க அறிவித்துள்ளார்.

கிழமையில் அடுத்தடுத்த நாட்களாக தொடர்ந்து இரு தினங்கள் மேற்படி கைதிகளை உறவினர்கள் சென்று பார்க்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டு. கிராமங்கள் ராணுவம் சுற்றிவளைப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கன்னன்குடா, படுவான்கரை பகுதிகளில் இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டனர். சுமார் பன்னிரண்டு போக்குவரத்து சபை பஸ் வண்டிகளில் சென்ற இராணுவத்தினர் சுற்றி வளைபபு மற்றும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலை;

## ஏழு மாத காலத்திற்குள் 3லட். பேருக்கு சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் இவ்வாண்டின் முதல் ஏழு மாத காலத்தில் மட்டும் மூன்று இலட்சம் நோயாளர்கள் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களைத் தவிர இக் காலப்பகுதியில் 30 ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு இந்த வைத்தியசாலை விடுதிகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நோயாளர்கள் வடமாகாணத்தின் பல்வேறு பகுதியிருந்து சிகிச்சைக்காக அங்கு வந்திருந்தனர்.

இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற வருவோரின் தொகை கடந்த மாததிலிருந்து தினமும் அதிகரித்து வருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

## வடக்கு கிழக்கிற்கு ஜேர்மனி 10மில்.ரூபா உதவி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பகுதி மக்களின் புனர்வாழ்வுப் பணிகளுக்கென ஜேர்மன் நாட்டு அரசு நிதிஉதவியளிக்க முன்வந்துள்ளது.

இந்த உதவிகள்யாவும் மேற்படி பகுதிகளில் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊடாகவே வழங்கப்பட உள்ளது.

முதற் கட்டமாக சுமார் பத்து மில்லியன் ரூபா வழங்கப்பட உள்ளது. மேற்படி தொகைப் பணத்தின் கணிசமான பகுதி வடபகுதியிலேயே செலவிடப்பட இருப்பதாக தெரிய வருகிறது. வடபகுதியில் பாதிக்கப்பட்ட மக்களிற்கு சுகாதாரம், கல்வி, குடியிருப்பு போன்ற துறைகளிலேயே கூடிய உதவிகள் வழங்கப்பட உள்ளது.

இம்முயற்சியின் முதற்கட்டமாக மேற்படி பகுதிகளில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது செயற்படுபரப்பில் உள்ள மக்களிற்கு வேண்டிய உதவிகள் குறித்து மதிப்பீட்டு அறிக்கைகளை தயாரித்து வருகின்றன

(க)

## 3 வருட பயிற்சி முடித்த தாதியர்சேவைக்கு அழைப்பு

யாழ்.வைத்திய சாலையில் ... தாதித்திய கற்கை நெறி

## தடுப்பு முகாமிலிருப்போரை 2 நாட்கள் சந்திக்கலாம்

(கொழும்பு)

தென்னிலங்கையிலுள்ள தடுப்பு முகாம்கள் மற்றும் சிறைச்சாலைகளில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் வட-கிழக்கு அரசியல் கைதிகளை கிழமையில் இரு நாட்கள் உறவினர்கள் சென்று பார்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க அறிவித்துள்ளார்.

கிழமையில் அடுத்தடுத்த நாட்களாக தொடர்ந்து இரு தினங்கள் மேற்படி கைதிகளை உறவினர்கள் சென்று பார்க்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

செல்லுபடியாகும் காலம் வரை

## பழைய கடவுச்சீட்டுக்கள் நடைமுறையில் இருக்கும்

(கொழும்பு)

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் கடந்த 3 ஆம் திகதி முதல் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து ஸ்தாபனத்தால் அனுமதிக்கப்பட்ட பரிமாணங்களுக்கமைய இயந்திரத்தினால் வாசிக்கக் கூடிய பிரயாணப் பத்திரங்களை வழங்கும் என்றும், பழைய தொடர் இலக்கக் கடவுச் சீட்டுக்கள் அவற்றில் செல்லுபடியாகும்காலம் வரை நடைமுறையில் இருக்குமென்றும் குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் ஈ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தக் கடவுச் சீட்டுக்கள் கணணியினால் அச்சிடப்பட்டு கடவுச் சீட்டுக்குரியவரின் விபரக் கொத்துக்கள் தரவு வங்கியில் திரும்பப் பெறும் பொருட்டும் வருங்காலப் பார்வைக்காகவும் பாதுகாத்து வைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

## சுதந்திரக் கட்சி செயற்குழு சந்திரிகா மீது கண்டனம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அத்தனகல தொகுதி அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி சந்திரிகா குமாரணதுங்க அண்மையில் லங்கா தீபவுக்கு அளித்த பேட்டி கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் பலத்த கண்டனத்திற்கு உள்ளாகியது.

அப்பேட்டியில் திருமதி சந்திரிகா 'ஹெல உறுமய' குழுவினரை இனவாதிகள் என்று குற்றம் சாட்டியிருந்தது தெரிந்ததே.

இதையடுத்து கட்சிப் பத்திரிகைக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் மாதாந்தம் செலுத்தும் ஐந்நூறு ரூபாவை இனிமேல் செலுத்த வேண்டாம் என்றும் கட்சியின் தேசிய அமைப்பாளரான அநுரா பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

## சுதந்திரக் கட்சியில் பிளவு; புதிய கட்சி உருவாகும்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி 1970-1977 காலப் பகுதியில் ஆட்சி செய்த போது அமைச்சர் பதவி வகித்த மூத்த அரசியல்வாதி ஒருவர் புதுக் கட்சி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளார்.

புதிய கட்சிக்குச் சிறிலங்கா மக்கள் காங்கிரஸ் என்று பெயர் வைக்கப்படவுள்ளதென்றும், வெகு விரைவில் அக் கட்சி தேர்தல் ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற விண்ணப்பிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இனப் பிரச்சினையில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள புதிய திருப்பங்கள்தான் இக் கட்சியை ஆரம்பிப்பதற்கான பிரதான காரணம் என்று அக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்க்கும் சிறிலங்கா மக்கள் காங்கிரஸ் இனப் பிரச்சினை

(4 ஆம் பக்கம் பார்க்க)

| | | |
|---|---|---|
| ★ ஐ. எம். ரவைகள் | — | 240 |
| ★ ஏ கே. லிங்குடன் ரவைகள் | — | 330 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி. கோல்சர் | — | 01 |
| ★ ஏ. கே எல். எம் ஜி. மகசீன் | — | 01 |
| ★ ரி - 81 மகசீன் | — | 07 |
| ★ ரி - 56 மகசீன் | — | 03 |
| ★ ஏ. கே. கோல்சர் | — | 02 |
| ★ ஜெ ஆர். கிரனைட் | — | 02 |
| ★ செற் | — | 01 |
| ★ செற் பற்றி | — | 01 |
| ★ ரெயின் கோட் | — | 01 |
| ★ சப்பாத்து | — சோடி | 01 |
| ★ தண்ணீர்கான் கோல்சர் | — | 02 |

## மீட்பு

(கொழும்பு)

பொலநறுவ பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிளான சாந்தகுமார ஒனகம காட்டில் சடலமாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த ஒருவார காலமாக காணாமல்போயிருந்தார் என்றும்' இவரது மரணம்தொடர்பாக விசாரணை நடத்திய

[4 ஆம் பக்கம் பார்க்க]

# இன்னல் தாங்காமலே அகதிகள் இலங்கை திரும்புகின்றனர்

## மனித நேய ஸ்தாபனம் குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழ் நாட்டில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகளில் 56 குடும்பங்கள் பல இன்னல்களுக்கு ஆளாகி இறுதியாக நாடு திரும்ப ஒப்புக் கொண்டதாகத் தமிழ் நாட்டில் பணி புரியும் மனிதநேய ஸ்தாபனங்கள் வெளியிட்ட தகவல்களை மேற்கோள் காட்டி பி. பி. சி தமிழ் நாட்டுக் கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

மேலும் இலங்கைத் தமிழ் அகதிகள் பலவிதமான துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தல்களுக்குப் பலியாகி கடைசியாக நாடு திரும்ப விருப்பம் தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது என்றும்,

அகதிகள் நாடு திரும்புவதாக ஒப்புக் கொண்டால் தான் மருத்துவ வசதி தரப்படும். பள்ளிக்கூடங்களில் இலங்கைத் தமிழ் அகதிகளின் பிள்ளைகளுக்கு படிக்க அனுமதி கிடையாது எப்பொழுதும் பொலிஸ் கண்காணிப்பு என்று பல தொந்தரவுகள் - இவ்வாறு பி. பி. சி மேலும் கூறுகிறது.

## வாராந்தம் இலங்கைக்கு 750 பேர் அனுப்பப்படுவர்

(சென்னை)

தமிழ் நாட்டில் இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளில் வரும் நவம்பர் மாதம் வரை 500 பேர் கப்பல்களிலும், 250 பேர் விமான மூலமும் வாரம் ஒரு முறை அனுப்பப்படுவார்கள்.

சுமார் ஒன்றரை இலட்சம் இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ் நாட்டில் வாழ்கின்றனா. தமிழ் நாட்டில் வாழும் இலங்கைத தமிழ் அகதிகளின் விருப்பம் கேட்டு, அவர்களைத் திருப்பி அனுப்ப சில காலம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

யாழ் குடாநாட்டில் வறுமை, போஷாக்கின்மை

# தகவலில்லாது 1500 குழந்தைகள் இறந்து கொண்டிருக்கின்றன

யாழ். குடாநாட்டில் போஷாக்கு நிலையில் குழந்தைகள் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதும், இவர்களில் சுமார் 1500 க்கும் 2000க்கும் இடைப்பட்டோர் தகவல் எதுவும் இல்லாமலேயே இறந்து கொண்டிருப்பதும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடத்தி பல ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இதுபற்றி தமிழர் புனர்வாழ்வுக்கழகம் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் மேலும் இத்தகைய குழந்தைகளில் நால்வர் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் இறந்துள்ளனர் என்றும், பெற்றோரின் தொழில் வாய்ப்பின்மை, வறுமை என்பன குழந்தைகளின் போஷாக்கு நிலையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், போஷாக்கின்மையால் பாதிக்கப்படும் குழந்தைகளை காப்பாற்றும் பணியில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் தீவிரமாகச் செயற்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் நியமனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கான கல்விப்பணிப்பாளராக கே தியாகராஜா நியமிக்கப்பட்டு உள்ளார். மட்டக்களப்பு பிராந்திய கல்விப்பணிப்பாளராக பணியாற்றி வந்த இவருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டதன் மூலம் இந்தநியமனத்தை பெற்றுள்ளார்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

படி பகுதிகளில் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊடாகவே வழங்கப்பட உள்ளது.

முதற் கட்டமாக சுமார் பத்து மில்லியன் ரூபா வழங்கப்பட உள்ளது. மேற்படி தொகைப் பணத்தின் கணிசமாக மேற்படி பகுதிகளில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது செயற்படுபரப்பில் உள்ள மக்களிற்கு வேண்டிய உதவிகள் குறித்து மதிப்பீட்டு அறிக்கைகளை தயாரித்து வருகின்றன (க)

## 3 வருட பயிற்சி முடித்த தாதியர்சேவைக்கு அழைப்பு

யாழ்.வைத்திய சாலையில் அண்மைக்காலமாக நிலவி வரும் தாதியர் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக 3 வருட பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறிய மாணவ தாதியர்கள் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தாதித்திய கற்கை நெறிகளை முடித்திருக்கும் இவர்கள் இறுதிப் பெறுபேறுகளை எதிர் பார்க்கின்றனர்.

சுமார் 150 மாணவத் தாதியர்கள் இம் மாதம் முதல் யாழ். வைத்திய சாலையில் கடமை புரிய அழைக்கப்பட்டுள்ளனர். (42)

## கிராமசேவகர்களை மக்கள் சந்திக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தமது பகுதி கிராமசேவகர்களைச் சந்திப்பதற்கும், இதன்மூலம் கிராம சேவையாளர்களிடமிருந்து சேவையைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

தீவகத்தைச் சேர்ந்த சகல கிராமசேவகர்களையும் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் யாழ். செயலகத்தில் அமைந்துள்ள வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச செயலாளர் காரியாலயத்திற்கு வந்து கடமையாற்றும்படி அரச அதிபர் பணித்துள்ளார். எனவே பொது மக்கள் மேற்படி தினங்களில் இக்காரியாலயங்களில் தமது வேலைகளைக் கவனித்துக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

## வெளிமாவட்டத்தவர்கள் மீள் பதிவு செய்ய கோரிக்கை

(கொழும்பு)

பிற மாவட்டங்களிலிருந்து கொழும்புக்கு வந்து தங்கியிருப்போர் தமது பெயர் விபரங்களை பொலிசில் மீளப் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே கொழும்பில் பொலிசாரிடம் தம்மைப் பதிவு செய்து கொண்டிருப்பவர்களும் தமது பதிவை மீளப் புதுப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். கடந்த வருடம் படிவங்களைப் பெற்று தமது பெயரைப் பதிவு செய்து கொண்டோரும் மீளவும் புதிய படிவங்களைப் பெற்றுப் பதிவு செய்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## தடுத்துவைக்கப்பட்டவருக்கு 25,000 ரூபா நஷ்டஈடு

(கொழும்பு)

பூஸா தடுப்பு முகாமில் சட்டத்துக்குப் புறம்பான முறையில தடுத்து வைக்கப்பட்டிருந்த கண்டி வாசியான ஹெட்டியாராச்சிவாகே கிங்ஸிலி என்பவருக்கு நஷ்டஈடாக 25,000 ரூபா வழங்கும்படி உச்ச நீதிமன்றம் தீர்ப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

**நீர் காத்து நிலம் காத்து வளிகாக்கும்போது நீ கொண்ட உடலுக்கு ஆயுளும் நூறு**

## வரி விளம்பரம்

### வகுப்புகள் (புதிய ஆண்டு-5)

ஆண்டு 4-இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் பரீட்சையை முன்னிட்டு திறமைக்கேற்ப தரம் பிரிக்கப்பட்டு புதிய வகுப்புகள் 08-08-92 சனி 2-00 மணிக்கு ஆரம்பமாகின்றன மாணவர் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 08-08-92க்கு முன் பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (2966)

### ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

நாளாந்த துரித மீட்டல் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆசிரியர்கள் திரு. T. பஞ்சாட்சரம், திரு. K. சபாநாயகம்.

*JAFFNA TECHNICAL INSTITUTE*, No. 4, பிள்ளையார் லேன் (வளாக ஒழுங்கை முன்பாக) திருநெல்வேலி. (2967)

### எழுது வினைஞர் சேவை

செப்ரம்பர் மாதம் நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைக்கான துரித பயிற்சி வகுப்புக்கள், திங்கள் புதன் கிழமைகளில் ஆரம்பம். 3-8-92 2-00 மணி *School of business Administration* 16, 3rd cross street Jaffna. (சி/4834)

### மாணவர் உணவு முத்திரை (யாழ்ப்பாணம்)

மாணவர் உணவுமுத்திரைக்கான உலர் உணவு விநியோகத்தை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி நடவடிக்கைக்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர்கள் உதவி, அரசாங்க அதிபர்கள், கூட்டுறவு உதவி ஆணையாளர் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது (க)

### மடுதிருப்பதி திருவிழா

மன்னார் மாவட்டத்தில் உள்ள மடுதிருப்பதியில்ஓகஸ்ட் மாத திருவிழாவைக்கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மடு திருப்பதி பரிபாலகர் அருட் திரு பி[illegible] அறிவித்துள்ளார்.

## சுயதொழிலை ஊக்குவிக்க கோழிக்குஞ்சு விநியோகம்

(நமது நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆனைவிழுந்தான் கிராமத்தைச் சேர்ந்த, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 71 குடும்பங்களுக்கும், ஒரு குடும்பத்திற்கு 20 கோழிக் குஞ்சுகள் வீதம் 1,420 ஒரு மாதக் குஞ்சுகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ளன.

ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளம் கிராமங்களுக்கு இடைப்பட்ட காட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆனைவிழுந்தான்கிராமத்தில் ரெட்பானா நிறுவனத்தின் உதவித்திட்டத்தின் கீழ் பல குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. தற்போது, றெட்பானா உதவித் திட்டம் முழுமையாக வழங்கப்படாததினால், இங்குள்ள மக்கள் பெரும் பொருளாதார இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இந் நிலையில்தமிழீழபொருண்மிய மேம்பாட்டுக்கழகம் இம் மக்களுக்கான சுயதொழில்வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்குமுகமாக. கோழிக்குஞ்சுகளை விநியோகம் செய்துள்ளது. மேலும், கோழிக்குஞ்சுகளை நல்ல முறையில் பராமரிப்பதற்குஏற்றவாறுகோழிக் குஞ்சுக்கான தீவனங்களையும் பராமரிப்புக் கூடுகளையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் வழங்கி வருகிறது இத் திட்டத்தின் கீழ் கோழிக்குஞ்சுகளைப் பெற்றவர்கள் அவற்றை வளர்த்து இனவிருத்தி செய்ததன் பின்னர், அவர்களிடமிருந்து மீளப் பெறப்படும் 20 கோழிக்குஞ்சுகளும், மீண்டும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் வேறு குடும்பங்களுக்கு விநியோகிக்கப்படும்.

## இன்று

நல்லூர் உற்சவகால தெய்வீக இசைரங்கில் சாரதா சச்சிதானந்தம் பாட உள்ளார் இப்பாடல்களுக்கு பக்க வாத்தியக்கலைஞர்களாக வயலின் சாந்தநாயகி சுப்பிரமணியம் அவர்களும் மிருதங்கம் எம். சிதம்பரநாதன் அவர்களும் பங்கேற்க உள்ளனர்

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் பொதுசன நூலக அபிவிருத்தி

யாழ். மாநகர நூலகத்தில் நூல் வளத்தைக் கணிசமான அளவு அதிகரிக்கும் பொருட்டு, போதியளவு நூல்களைக் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம தொடர்பாக பொதுமக்கள் சிபார்சு செய்யும் நூல்களுக்கு முன்னுரிமை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மாநகர எல்லைக்குள்ளும், அப்பாலும் வதியும் அறிஞர்கள், கல்விமான்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள், பொதுத்தாபனங்கள், திணைக்களங்கள் ஆகியவற்றைச் சார்ந்தவர்களிடமிருந்தும், நூலக வாசகர்களிடமிருந்தும், அவர்கள் விரும்பும் நூல்கள் தொடர்பான பூரண விபரங்களை (புத்தகத்தின் பெயர், எழுதியவர் பெயர், பிரசுரிப்பாளர்) உள்ளடக்கிய பட்டியல்களை 20-08-92 வியாழக்கிழமைக்கு முன்பதாக எனக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி.

மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம். 04-08-1992. சி/4830

வே. பொ. பாலசிங்கம், மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்

## ஓராண்டின் நீங்காத நினைவலைகள்...!

## வெற்றிடம்

### பிரதேசப் பணிப்பாளர் அகில உலக கெயர்

**பொறுப்புக்கள்:**

கிராமிய அபிவிருத்தித் திட்டங்களைத் திட்டமிடுதல், நிர்வகித்தல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல், வரவுசெலவுத் திட்டம் உட்பட காரியாலய கணக்குகளையும், நிதியையும் நிர்வகித்தல்; காரியாலய நிர்வாகம், மற்றும் திட்டங்களை நிர்வகித்தல்: பிரதேசத்தின் சரியான திட்ட நிகழ்வுகளையும், முன்னேற்றத்தையும் உரியநேரத்தில் அறிவித்தல்; அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் தொடர்பு; பணியாளர்களை நிர்வகித்தல்; பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப் படவிருக்கும் புதிய திட்டங்களை உருவாக்கல்; வாகனங்களின் நடமாட்டம் பற்றியும், அவற்றின் பராமரித்தலையும் நிர்வகித்தல்; கெயர் ஸ்தாபன பிரதான பிரதிநிதியாக அப் பிரதேசத்தில் சேவையாற்றல்.

**தகைமைகள்**

மேற்படி வேலைகளில் 5 - 10 வருட அபிவிருத்தி / நிர்வாக கடமைகளில் அனுபவம். இத்துறையில் அனுபவம் வாய்ந்த பட்டதாரியாக இருத்தல். ஆங்கிலத்திலும், தமிழிலும் பேச எழுதக் கூடிய நல்ல தகைமை இருத்தல் சிங்களத்தில் வேலை செய்யக் கூடிய ஆற்றல் உதவியாக இருக்கும்.

**பொது**

சம்பளமும் இதர சலுகைகளும் தகுதி, அனுபவம் திறமைக்கேற்ப வழங்கப்படும். பெண்களும் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

விண்ணப்பங்கள் யாவும் உறவினரல்லாத இரண்டு நடுவர்களின் பெயரோடு, ''ஆளணி/நிர்வாக உத்தியோகத்தர், அகில உலக கெயர், கொழும்பு'' விற்கு அனுப்பி வைப்பதற்காக 20-08 92 அன்று அல்லது அதற்கு முன்னதாக கீழ்வரும் முகவரியில் எம்மால் பெற்றுக் கொள்ளப்படும்.

அகில உலக கெயர்
15, கண்டி வீதி
யாழ்ப்பாணம் (2960)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



கோயிற் குடியிருப்பில் மழலையாய்
24 - 12 1977

ஆனையிறவினில் மாவீரனாய்
03 - 08 - 1991


திதி :
06 - 08 - 1992

### வீரவேங்கை இன்பம்

[நடராசா றஞ்சித்குமார் (குட்டி)]

குட்டி நம்மைவிட்டு எட்டிவிட்டாய்
ஆனாலும் தொட்டுவிட்டாய் தமிழீழப் படியினை
எம் செல்வமே எங்களைவிட்டுப் பிரிந்து ஓராண்டு
காலமாகி விட்டதடா
[illegible]

## 4ஆம் ஆண்டு நினைவு



### லெப். விக்டர்

(ஞா. விக்றோறியன் நேசராஜா)

வயாவிளானில் மழலையாய் 18-07-1968

வன்னியில் வரலாறாய் 06-08-1988

அன்னையவள் மடியினிலே நேசராஜா
வன்செயலை ஒழிக்கவந்த விக்டர் என்றான்
தன்னரிய செயல்களினால் வீரனுமாகி—இன்று
இன்னுயிரை தமிழுக்களித்து தியாகியுமானான்.

இந்திய இராணுவத்தின் இதயமற்ற செயல்களை
முந்தி நின்று போர்புரிந்து முதுகெலும்பை முறிக்கையிலே
சிந்திய குருதியால் சிவந்தது இந்நிலம்
சிந்தையில் நிறைந்தாய் தியாகியாகவே

உன் பிரிவால் துயருறும்
பெற்றோர், அக்கா, அண்ணா,
தங்கைமார், நண்பர்கள்.

கணேசபுரம்,
கிளிநொச்சி.
(2965)

## நினைவு கூருகின்றோம்...

### 1992 - 08 - 06

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் வவுனியாவில், சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட உணவக ஊழியர்களான 4 - தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு திருக்கோணமலைச் சந்தியில் தமிழீழத் தேசியக் கொடியான புலிக்கொடியினை ஏற்றும் போது, சிறிலங்கா ஊர்காவற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய -

நாட்டுப்பற்றாளரான -

**அறுமுகநாதன்**

1989ஆம் ஆண்டு கிளிநொச்சி 7ஆம் வாய்க்கால் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**வினோதன்** (செபஸ்தியாம்பிள்ளை சிறியோகராஜா - கனகபுரம், கிளிநொச்சி)

1990ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**பரணி** (மீசாலை)

இதே பகுதியில், எதிர்பாராதவிதமாக பொறிவெடியில் சிக்கியதில் எம்மைப்பிரிந்த -

**பாலன்** (ஞானபாலன் ஆரியவன்சன் - எல்லையடி, கண்டி வீதி, உமையாள்புரம், கிளிநொச்சி)

யாழ் - கோட்டைப்பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**2-ம்லெப். பாருதி/கண்ணன்** (விஷ்ணுகாந்தி

பரிபாலகர் அருட் திரு பி யேசுராசா அறிவித்துள்ளார்.

## பருத்தித்துறை கிளை தேர்தல்

(பருத்தித்துறை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், பிரிவுத் தேர்தலும் இம் மாதம் 09 - 08 - 92 அன்று காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை, வடஇந்து மகளிர் கல்லூரியில் நடைபெற இருப்பதாகவும், அக்கூட்டத்திற்கு உறுப்பினர்கள், தொண்டர்கள், நலன் விரும்பிகள் யாவரும் வருகை தரும்படியும் பிரிவுத் தலைமையகம் அறிவித்துள்ளது.

### பரிசில் வழங்கி கௌரவிப்பு

தவறவிடப்பட்ட பணப் பொதி ஒன்றை உரியவரிடம் ஒப்படைத்த ஒருவரின் மனித நேயத்தைப் பாராட்டி பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் முதலாம் திகதி கொம்படிப் பாதையில் கண்டெடுக்கப்பட்ட பணப் பொதியை உரியவரிடம் ஒப்படைத்த திரு.ரா. பாலச்சந்திரன் என்பவர் கடந்த முதலாம் திகதி யாழ். மாவட்டச்செயலகத்தில் நடைபெற்ற கலை விழாவின் போது திரு வே. பாலகுமார் அவர்களினால் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

## தவறிவிட்டது

சுவீடனிலிருந்து வந்துள்ள ஒரு பேராசிரியருக்குச் சொந்தமான வீடியோ, கமராவின் ''சொனி'' ரக பற்றரி (6V, 2200 mAh) தவறிவிட்டது. இதில் அவருடைய பெயர் பொறிக்கப்பட்டுள்ள சிவப்பு நிறத் தாள் ஒட்டப்பட்டுள்ளது. கண்டெடுப்பவர்கள் இதைஉரியவரிடம் ஒப்படைக்கவும்.



## லெப்டினன்ட் பானு

(திருச்செல்வம் – தெம்சிக்குமார்)

தாய் மடியில் முத்தாக: 1973-07-15

தமிழ் மண்ணில் வித்தாக: 1991-08-06

மாவீரனே!...
ஈழத்தில் வீழ்ந்த விதை - நீ
எம் இதயத்தில் விளைந்த முத்து - நீ
தலைவனின் பாதையில் தவறாது சென்று
தன்மானத்துடன் தமிழிற்காய் விதைக்கப்பட்டவனே!

எதிரி உன்னை அழித்து விட்டான் என்று
கல்லறையில் முடங்கிக் கிடந்து
கண்ணீர்விடும் கோழைகள் அல்ல - மாறாக
உம் கல்லறையில் உறுதி மொழி எடுத்து
உங்கள் இலட்சியப் பாதையில் வீறுநடைபோடும்வீரர்கள்

உம் இலட்சியம் நிறைவேறும் வரைக்கும்
நிட்சயம் இந்த ஆயுதம் மண்ணில் வீழ்பவை அல்ல,
சீறிச் சினங்கொண்டெழும் வேங்கைகளின்
வீரக் கரங்களில் வீழ்பவை, உன் குருதியால்
அன்று சிவந்த வன்னி மண் நிச்சயம் ஒரு நாள் சிரிக்கும்.

பானுக்குட்டி!
நாளை மலரும் தமிழீழத்தில் - நிச்சயம் நீ
எம் மண்ணில் மீண்டும் வேங்கையாக,
மலருவாய் என்ற நம்பிக்கையில் உனக்காகக் காத்து இருக்கும்

பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

– மாமா குடும்பத்தினர்

( 2964 )


காலமாகி விட்டதடா
நீ வருவாய் வருவாய் என எதிர்பார்த்தே ஏமாந்தோம் குட்டியே
இனி எப்பிறப்பில் உம்மை காண்போமோ எம் வீர மகனே குட்டி

உமது பிரிவால் வாடும்
அப்பா, ஜெயந்திச்சித்தி, சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.

கச்சாய் வீதி.
சாவகச்சேரி.
(2970)

## 1 ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
02 — 04 — 1975



இறைவன் அடியில்
21 — 07 — 1991

## புத்திரசிகாமணி செல்வக்குமரன்

(கோபு)

வல்வெட்டித்துறை

திதி: 07. 08. 1992

பெற்ற மகனே! பாசமுள்ள கோபு
சித்தம் கலங்கி சிறகிழந்த பறவையானேன்
உற்றார் பலரும் உன்னருமை சகோதரர்கள்
ஓலமிட்டலறும் ஒலிதான்கேட்காதோ
பற்றாக நின்றென் கடமை செய்ய நாளை
பாலன் உண்டென்று பெருமை கொண்டேன்
சற்றேனும் இரக்கமில்லா சண்டாளன்
சடுதியாய் வந்து சிதைத்தானே என் மகனே!

திதியில் உற்றார் உறவினர் நண்பர்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இறங்குதுறை அருகாமை
பருத்தித்துறை.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(சி 4826)

**2-ம்லெப். பாருதி/கண்ணன்** (விஷ்ணுகாந்தி கருணாகரன் - கருணாகரன் வீதி, மீசாலை தெற்கு)

**சித்திரன்** (பரமானந்தம் ஜீவானந்தன் - சந்தை மேற்கு வீதி, பருத்தித்துறை)

**பயஸ்**

மட்டக்களப்பு - பெரியகல்லாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 29- தமிழ் இளைஞர்கள் - முறக்கொட்டாஞ்சேனை முகாமிலிருந்து புலிபாய்ந்தகல் முகாமை நோக்கி நிகழ்ந்த எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பொது மகன் - சந்திவெளித்துறைப் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

திருக்கோணமலை - பாலையூற்றுப் பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன 6 - தமிழர்கள்.

முல்லைத்தீவு - சிலாவத்தைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 - தமிழர்கள்.

யாழ். பலாலி முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின் போது தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய இடம் பெயர்ந்தோர் முகாமில் கொல்லப்பட்ட பெண் உட்பட 2 - தமிழர்கள் - கொக்குவில் புகையிரத நிலையத்தை அண்மித்த பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 - தமிழர்கள் - உலங்கு வானூர்தியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டினால் மீசாலையில் கொல்லப்பட்ட இளைஞன், திருநெல்வேலி வளாக வீதியில் கொல்லப்பட்ட பொதுமகன் ஆகிய 2- தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு முல்லைத் தீவில் சிறிலங்கா இராணுவ முகாம் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**2-ம்லெப்.பானு** (திருச்செல்வம் தெம்சிகுமார் - முல்லைத்தீவு)

**2-ம்லெப்-கீரன்** (சின்னத்தம்பி ரமேஸ்குமார்-குமுழமுனை, மணலாறு)

**கலைச்செல்வன்**

**சங்கர்**

ஆனையிறவில் முகாமிலிருந்து வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சுதாகர்** (இராசதுரை சுகுமார்-வளலாய், அச்சுவேலி)

**பூர்ணிமா** (வசந்தி பேரம்பலம் - 10, 3ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை கிழக்கு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/4833]

சிந்தனைக்கு

அரசியல், ஒரு நிரந்தர அவசரகால நெருக்கடி
— ரால்ஃப் லீகிளர்க் ரொடெர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 06 - 08 - 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## அ. தி. மு. க. - காங்கிரஸ் உறவில் வெடிப்பு

"தமிழக அரசு விடுதலைப்புலிகள் சம்பந்தமான பிரச்சினையில் மெத்தனமான போக்கை கடைப்பிடித்து வருவதாக தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும் தமிழக சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ் ஆர். பாலசுப்பிரமணியமும் சென்னையில் தனித் தனியே நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு.க. அரசாங்கத்தைக் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதுவரை தமிழகத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சி ஓர் எதிர்க்கட்சியாக செயற்படவில்லை. அ.தி.மு.க. அரசாங்கத்திற்குத் துதிபாடும் ஓர் கட்சியாகவே இருந்து வருகின்றது என்று பரவலாகக் குற்றம் சாட்டப்பட்டு வந்தது. இதை உறுதிப் படுத்துமாப்போல் அ.தி.மு.க. அரசிற்கு எதிராக பத்திரிகையில் எழுதிய இந்திரா காங்கிரஸ் பிரமுகர் சுப்பு கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். காங்கிரஸ் கட்சிக்குள் இருந்த மூப்பனார் கோஷ்டியினர் ஜெயலலிதா ஆட்சியை ஓரளவிற்கு விமர்சிக்க முற்பட்ட வேளையிலும் தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவரான வாழப்பாடி ராமமூர்த்தியும், எதிர்க்கட்சித் தலைவர் பாலசுப்பிரமணியமும் ஜெயலலிதா விசுவாசிகளாகவே இருந்தனர். சிலவேளைகளில், அ.தி.மு.க. எம்.எல்.ஏ. களைவிட ஜெயலலிதாவிற்குத் துதிபாடவும் அவர்கள் தயங்கவில்லை.

இந் நிலையில் தற்பொழுது வாழப்பாடி ராமமூர்த்தியினதும், பாலசுப்பிரமணியத்தினதும் பேச்சுக்கள் அ.தி.மு.க.-காங்கிரஸ் தேனிலவு முடிவுறுகின்றதா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. அண்மைக் காலத்தில் ஜெயலலிதா மீது வாழப்பாடி ராமமூர்த்தி சுமத்தியுள்ள இரண்டாவது குற்றச் சாட்டு இதுவாகும். இதற்கு முன்னர், ராஜீவ் காந்தியின் மரணத்தினால் ஏற்பட்ட அனுதாப அலையே ஜெயலலிதாவின் வெற்றிக்குக் காரணம் என்பதனை ஜெயல்லிதா அரசு மறந்துவிடக்கூடாது என்ற ரீதியில் திரு. வாழப்பாடி பேசியிருந்தார்.

இதேவேளை, ஜெயலலிதா மீது 1.87 கோடி ரூபா நிலபேர ஊழல் தொடர்பாக எழுந்ததொரு குற்றச்சாட்டின் அடிப்படையில், அ.தி.மு.க. அரசாங்கத்தைக் கலைத்து விடுமாறு எதிர்க்கட்சிகள் -காங்கிரஸ் கட்சி தவிர - மத்திய அரசாங்கத்தைக் கோரின. அத்தோடு, தமிழக சட்டசபைக்கும் - பத்திரிகைகளுக்கும் இடையில் எழுந்த பிரச்சினை தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை தமிழக அரசு உதாசீனம் செய்ததும் மத்திய

# அமெரிக்காவின் விருப்பையும் மீறி யூக்கோ. உடைந்து போகிறது

கெடுபிடிப் போரின் போது அதிர்ச்சியூட்டும் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த நாடாகத்திகழ்ந்த யூகோசிலாவியாவில் தற்போது நடப்பவற்றை உற்றுநோக்கின், அங்கே ஒரு மூன்றாம் உலகப் போர் நடைபெற்று வருவது போல் காட்சியளிக்கின்றது. இந்த நாட்டிலிருந்து பிரிந்து சென்றுள்ள பொஸ்னியா கெர்சோகோவின்னாச் (Bosiz Herzegovina) குடியரசின் தலைநகரானசரயேவோ (Sarajevo) விலேயே முதலாம் உலகப் போர் தொடங்கியது.

தற்போது பொஸ்னியாவில் நடைபெற்றுவரும் இனக்கலவரங்கள் ஐரோப்பிய சமூக நாடுகளின் இராசதந்திர உபாயங்களின் இயலாமையைச் சித்தரித்துக் காட்டுகின்றன என பார்வையாளர்களின் அறிக்கைகள் கோடிட்டுக்காட்டுகின்றன. இங்குநடைபெற்றுவரும் சிக்கலை தீர்ப்பதற்கு அமெரிக்காவோ, ஐரோப்பிய சமூக நாடுகளோ எடுத்த இராசதந்திர ரீதியான முயற்சிகள் முன்னேற்றகரமான மனநிறைவை ஏற்படுத்துவதிலும் பார்க்க மனச்சோர்வையே அளிக்கின்றன என அவர்கள் கூறுகின்றனர்.

சோவியத் ஒன்றியம்என்ற பேரரசு குலைந்து சீரழிந்து போனதினால் ஐரோப்பிய நாடுகளின் அரசியலமைப்புக்களில் மாற்றங்கள் ஏற்பட்டன. அத்தோடுகிழக்கைரோப்பாவிலும், தெற்கைரோப்பாவிலும் அந்த வல்லரசு விட்டுச் சென்ற அடையாளங்கள் விரைவாக மறைந்துவருகின்றன.

ஐரோப்பாவில் வளர்ந்து வரும் ஜெர்மனியின் மேலாண்மையும் செல்வாக்கும் அங்கே உள்ளவர்களுக்கு உள்ளூர அச்சத்தை தரும் வேளையில் யூகோசிலாவியாவில் கூட்டரசு குலைந்துபோனது. ஐரோப்பிய அரசியலில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாட்டுத் தூதுவர்கள் ஒன்று கூடும்போதெல்லாம் ஜெர்மனியின் மேலாண்மையையும், செல்வாக்கையும் பற்றிய பேச்சே அவர்களின் பேச்சுக்களில் கலந்துவருகின்றது. ஆனால் இந்த மேலாண்மை இப்பொழுதும் ஒரு கருத்தாகவே இருக்கின்றது.


பின் விளைவுகளைத் தடுக்கும் வகையில் தெற்கைரோப்பிய சமநிலை வலுவை நிலைநிறுத்துவதற்காக மேற்குநாடுகள் யூகோசிலாவியக் கூட்டணி நாடு சீர்குலைந்து போகாமல் காப்பாற்ற நடவடிக்கைஎடுக்கவேண்டுமென்று, சில காலங்களுக்கு முன்னர், அமெரிக்க இராசாங்க அமைச்சர் திரு. ஜேம்ஸ் பேக்கர் மன்றாடிக் கொண்டிருந்தார். குறோசியாவிலும் (Crotia) சிலோவேனியா (Slovenia) விலும் வளர்ந்துவரும் இனக் கலவரங்களினால் யூகோசிலாவியாவின் ...

செல்வது ஜெர்மனிக்கு, அதன் சொந்த அரசியல் நலன்களுக்காகவும் இன நலன்களுக்காகவும் தேவைப்பட்டது. இந்த இரு குடியரசுகளும் ஒரு காலத்தில் ஒசுறோ - ஜெர்மன் (Austro - German) பேரரசில் இருந்ததோடல்லாமல் இரண்டாவது உலகப்போரின்போது இவ் இரு குடியரசுகளிலிருந்த மக்களும் நாசிகளுக்குச் சார்பாக இருந்தனர். இந்த இரு குடியரசுகளையும் அங்கீகரித்ததனால் சேர்பியர்களின் ஆட்சிக்குட்படாத நிலப்பரப்புக்களில் உள்ள சேர்பியர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கில் சேர்பியத் தீவிரவாதக் குழுக்கள் வளரத் தொடங்கின. யூகோசிலாவியக் கூட்டணி அரசாங்கத்தின் இராணுவத்தில் உயர்பதவிகளில் சேர்பியர்களை பெரும் பான்மையாக இருப்பதனால், இந்தச் சேர்பியத் தீவிரவாதக் குழுக்களுக்கு வெளிப்படையாக யூகோஸ்லாவிய இராணுவம் ஆதரவு அளித்து வருகின்றது. நீண்டகாலமாகப் பொஸ்னியாவில் சகிப்புத்தன்மையுடன் இணைந்த வாழ்க்கை நடத்தி வந்த முசுலிம்களினதும் கிறிஸ்தவர்களினதும் வாழ்க்கை முறை முடிவுக்கு வந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானப்படை பாதுகாப்பின்மை காரணமாக தனது முயற்சியைக் கைவிட்டுவிட்டது.

யூகோசிலாவியாவிலுள்ள ஆறுகுடியரசுகளிலும்சேர்பியா மிகப் பெரிதும் செல்வாக்கு மிக்கதுமாகும். யூகோசிலாவியக் கூட்டணி அரசு தற்போதிருக்கும் நிலையிலிருந்து குறைந்து போகாமல் இருப்பதற்கு அந்தநாட்டு சனாதிபதி திரு. சிலோபொடன் மிலோசேவிக் (Slobodon Melosevic) அரும்பாடுபடுகின்றார். குறோசிய நிலப்பரப்பில் 30 சதவீதமும், பொஸ்னியா நிலப்பரப்பில் 70 சதவீதமும் சேர்பியர்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. இங்கு சேர்பிய இனத்தவர்கள் கணிசமான அளவில் வாழ்கின்றனர் என சேர்பியர்கள் கூறுகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் கணிப்பீட்டின்படி 12 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் (அநேகமாக குறோசியர்களும், பொஸ்னியர்களும்) முன்னைய யூகோசிலாவியாவின் எல்லைக்குள் வசிக்கின்றனர். 250,000 மக்கள் நாட்டைவிட்டு வெளியேறி அமெரிக்காவுக்கும், மேற்கு ஐரோப்பிய நாடுகளுக் ...

னப்படை ஏறக்குறைய முழுமையாக வெளியேறிய நிலையில் இந்தப்பேரழிவு தொடர்ந்தும் நடைபெறுகின்றது. உணவு மற்றும் மருந்துவகைகளின் பற்றாக்குறை காரணமாக மக்கள் ஆயிரக்கணக்கில் இன்னல்படுகின்றனர்.

தேசிய ரீதியில் மக்களின் ஏகோபித்த வாக்களிப்பு மூலம் பொஸ்னியா கெர்சோகோவின் மக்கள் சுதந்திர நாடாக இருப்பதற்கு வாக்களித்துள்ளனர். யூகோசிலாவியாவிலுள்ள குறோசியாவில், போர் சென்ற ஆண்டு தான் மூண்டது. ஆனால் அப்போர் தெற்குப்பக்கமும், கிழக்குப்பக்கமும் பரவி 12,000 மக்



களைப் பலிகொண்டுள்ளது. ஆயிரக்கணக்கில் மக்கள் காணாமற் போயுள்ளனர். இதை ஒரு மனித அவலம் என திரு. பேக்கர் கூறுகின்றார். இந்தக் கொடூர வன்முறைகள் ஐரோப்பியா முழுவதிலும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. சேர்பியப் படைகள் குறோசியாவுக்குள் படையெடுத்தபோது சனாதிபதி மிலோசேவிக் யூகோசிலாவியாவை ஒரே நாடாக வைத்திருக்க நடவடிக்கை எடுத்ததாகத் தொடக்கத்தில் மேற்கத்தைய இராசதந்திரிகள் வாதித்தனர். ஆனால் பொஸ்னியாவின் எல்லையின் இருமருங்கிலும் நடந்த இனரீதியான இராணுவ அட்டூழியங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பரந்த சேர் ...

பால்கன் போரில் (Bilkanwar) சேர்பியாவும், கிரேக்கமும்கூட்டுச் சேர்ந்து போரில் ஈடுபட்டன. இந்தப்போர் முடிவுற்றதும் தாங்கள் கூட்டாகச் சேர்ந்து கைப்பற்றிய நிலப்பரப்புக்களை பங்கீடு செய்வதில் ஏற்பட்ட பிணக்கினால் அவை தங்களுக்கிடையே சண்டையில்ஈடுபட்டன. இந்த நேரத்தில் தான் வல்லரசுகள் நடவடிக்கையில் இறங்கி யூகோசிலாவிய நாட்டின் புதிய எல்லைகளை தீர்மானித்தன. அப்போது அவ்வெல்லையின்தென் பகுதிக்குள் பெருமளவில் சேர்பிய மக்களை கொண்ட பகுதி உள்ளடக்கப்பட்டது. இச்சேர்பிய மக்களின் தேசியஉணர்வே யுகோசிலாவியாவின் பெரும்பாலான சேர்பியர்களைக் கொண்ட இராணுவத்திற்கு உந்து ஆற்றலாக இருக்கின்றது.

சனாதிபதியோசிப் பிறோண் டிட்டோ (Josep bros tito) அவர்களின் ஆட்சிக்காலமான 1948-ம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு மே மாதம் 4-ந் திகதி (அவர் இறக்கும்வரை) வரை யூகோசிலாவியாவின் ஐக்கியம் பேணப்பட்டது சிலோவேனியா, குறோசியா, மசிடோனியா, பொஸ்னியா மொன்ரேநீக்ரோ ஆகிய குடியரசுகள் சேர்பியாவுடன் ஒரு இறுக்கமற்ற பிணைப்பின் அடிப்படையில்கூட்டாட்சியில் இருப்பதற்கு இணங்கியிருந்தன. யூகோசிலாவியாக் கூட்டரசு என்ற நாட்டுக்கு ஒரு ...

ஐரோப்பிய நாடாக இந்நாடு திகழ்ந்தது. தற்போது அங்கு நடைபெற்றுவரும் இனப்பூசல்களும், தகுதியான தலைமைப் பீடமின்மையும், பூகோள அரசியல் ரீதியான நெருக்கடிகளும் ஒரு வெற்றிடத்தைத் தோற்றுவித்துள்ளன.

சனாதிபதி மிலோசேவிக் அவர்களை ஒரு ஆக்கிரமிப்பாளன் என மேற்கு நாடுகள் கண்டிருக்கின்றன. இந்நாட்டில் நடைபெற்று வரும் அட்டூழியமும் அநாகரிகமுமான இரத்தக் களரியையும் தொலைக் காட்சி மூலம் பார்க்கும் உலக மக்களின் கருத்தை சேர்பியாவுக்கு எதிராக மாற்றி உள்ளது. இந்த இரத்தக்களரியைப் பலமாதங்களாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியாத நிலைதடுமாறிய நிலையிலிருந்த அமெரிக்கா, இறுதியாக அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் சேர்பியாவைத் தனிமைப் படுத்தும்வகையில் இராசதந்திர ரீதியான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. உணவில் தன்னிறைவும் போதுமான நில நெய்யும் கையிருப்பில் உள்ளதால்சேர்பியாவுக்கு எதிராக விதிக்கப்படும் தடை அந்நாட்டைப் பாதிக்க மாட்டாது.

ஐரோப்பிய நாடுகளுக்கிடையே அடிக்கடி பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட கறிங்ரன் பிரபு (Lord Carrington) வின் செயற்பாடுகள் பயனளிக்கவில்லை. பிரித்தானியாவும் ஜெர்மனியும் பொருளாதாரத் தடையுடன் ஓரளவு இராணுவ நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வேண்டும்என நினைக்கின்றன. ஜெர்மனி தனது நலன்களைக் கருத்திற் கொண்டு ஐரோப்பிய நாடுகளில் தனது கருத்துக்களைத் திணிப்பதையிட்டுப் பிரான்ஸ் மன நிறைவு எய்தவில்லை.

தன்னிச்சையாக அமெரிக்கா எதுவித நடவடிக்கையிலும் இறங்காதென்றும் பலாத்காரத்தைப்பிரயோகித்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுயலாதென்றும் திரு ஜேம்ஸ் பேக்கர் கூறியுள்ளதாகத் தெரிய வருகின்றது. இந்த இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை எட்ட முடியாதிருந்தால், தீர்வை எட்டுவதற்கு மேற்குலக நாடுகள் வேறு பல திட்டங்களை வைத்திருக்கின்றன. அவற்றில் ஒன்று வட அத்திலாந்திக் நாடுகளின் படைகளை ஈடுபடுத்துதல் அல்லது ஐக்கிய நாடுகள்

ழக அரசு உதாசீனம் செய்ததும் மத்திய அரசு - தமிழக அரசு உறவில் சற்று கீறலை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில்தான் அ.தி.மு.க. மதுரையில் பெரியளவில் தனது கட்சி மாநாட்டை நடத்தியது. இம்மாநாட்டின் நோக்கமே மத்தியிலுள்ள அரசாங்கத்திற்கு தமது பலத்தைஜெயலலிதா காட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது என இந்திய பத்திரிகைகள் தமது விமரிசனத்தில் தெரிவித்துள்ளன. அத்தோடு ராஜீவ்காந்தியின் மரணத்தினால் ஏற்பட்ட அனுதாப அலையில் தாம் வெற்றி பெறவில்லை என்பதை நிருபிக்க முற்படுவதாக இருந்ததாகவும் தெரிவித்தன. இந்நிலையானது தமிழக காங்கிரஸ் — அ.தி.மு.க உறவில் சற்றுவிரிசலை ஏற்படுத்தியது. அத்தோடு திருச்சியில் நடந்த காங்கிரசின் தேசிய மாநாட்டில் அ. தி. மு. கவிற்குக் காங்கிரஸ் அழைப்பிதழ் அனுப்பியிருந்தது ஆனால் மதுரை மாநாட்டிற்கு காங்கிரஸ்காரர் அழைக்கப்படவில்லை. இதுவும்காங்கிரஸ்கட்சியின் தரப்பில் முணுமுணுப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில்தான் வாழப்பாடி ராமமூர்த்தியும், பாலசுப்பிரமணியமும் அ.தி.மு.க. அரசு மீது கூறியுள்ள குற்றச்சாட்டு தேன்நிலவு முடிவுற்றதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது இவ்வாறு குறிப்பிடுவதற்கும் அனுமானிப்பதற்கும்மேலும் சில காரணங்கள் உண்டு.

மத்தியிலுள்ள சிறுபான்மை அரசிற்கு அ. தி. மு. கவின் உதவி இப்போதைக்கு உடனடியாகத் தேவையில்லை. இவ்வாண்டிற்குரிய வரவுசெலவு திட்டமும், இந்தியாவிற்கான ஜனாதிபதியையும் நரசிம்மராவின் சிறுபான்மை அரசுதான் விரும்பியவாறு தேர்ந்தெடுத்துக் கொண்டது. இந்நிலையில் அ.தி.மு.க. அரசாங்கத்தை சற்று தட்டி வைக்க மத்தியிலுள்ள நரசிம்மராவ் அரசாங்கம் விரும்பலாம்

இந் நிலையில் தமிழகத்தின் சட்ட ஒழுங்கு பிரச்சினையை தமிழக காங்கிரஸ்கட்சி தமது பிரச்சினையக்கையிலெடுத்துக் கொள்ளலாம் தி.மு.க. ஆட்சியைக் கலைக்க எந்த அஸ்திரத்தை அ தி மு.க. பயன் படுத்தியதோ அதே அஸ்திரத்தை அ. தி. மு.கவிற்கு எதிராக காங்கிரஸ் பயன்படுத்தலாம். அதாவது மத்திய அரசிற்கு ஓர் அயோத்தி விவகாரம், தமிழக அரசிற்கு சட்டம் ஒழுங்கும் எதிர்கால ஆட்சிக்கு சவாலானதாகவே அமைந்துவிடலாம்.

கலவரங்களினால் யூகோசிலாவியாவின் சீரான நிலைமை சீர்குலையத் தொடங்கியது. ஐரோப்பிய சமூக நாடுகளின் மன்றுகளில் ஜெர்மனியின் செல்வாக்குப் பெருகத்தொடங்கியமையால், ஐரோப்பிய சமூக நாடுகளுக்குப் பிரிந்து சென்ற குடியரசுகளான குரோசியாவையும், சிலோவேனியாவையும் அங்கீகரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது

சேர்பியரின் மேலாண்மையிலுள்ள யூகோசிலாவியாவில் இருந்து குறோசியாவும், சிலோவேனியாவும், பிரிந்து

யேறி அமெரிக்காவுக்கும், மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் அரசியல் புகலிடம் கோரிச்சென்றுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் இரகசியமாக எல்லைகளைக் கடந்து தங்கள் உறவினருடன் வாழ்ந்து வருகின்றனர்.

இதுதான் இரண்டாம் உலகப்போரின் பின்னர் நிகழ்ந்த பாரிய கட்டாயக் குடிபெயர்வு ஆகும் எனவும், இது ஒரு தொடக்க நடவடிக்கை எனவும் பார்வையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் சமாதா

கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பரந்த சேர்பியா என்ற சேர்பியர்களின் கொள்கைதான் பாரிய அழிவுகளைக் கொண்டுவந்துள்ளது.

சேர்பியர்கள் ஒரு புனிதப் போரில் தாங்கள் ஈடுபட்டுள்ளதாக நினைக்கின்றனர். 19-ம் நூற்றாண்டின் இறுதிவரையும் சேர்பியா ஒட்டோமான் பேரரசின் கீழ் இருந்த துருக்கியர்களை ஐரோப்பிய மண்ணில் இருந்து கொன்ஸ்தாந்தினோபிள் (Constantinople) நுழைவாயில் வரை வெளியேற்றுவதற்காக நடைபெற்ற முதலாவது

தன. யூகோசிலாவியாக் கூட்டரசு என்ற நாட்டுக்கு ஒரு புதிய தேசிய அடையாளத்தையும் ஒரு கொள்கையையும் ஜனாதிபதி மார்சல் டிட்டோ பெற்றுக்கொடுத்தார். இரண்டாவது உலகப்போரின் பின்னர் முன்னாள் சோவியத் ஒன்றியத்தினதும் அதன் தலைவர் ஸ்டாலின் அவர்களினதும் மேலாண்மையை எதிர்த்த முதலாவது பொதுவுடமை நாடு யூகோசிலாவியாவாகும். இதன் பின்னர் அணிசேரா நாடுகளின் இயக்கத்தில் உறுப்புரிமை வகித்த முதலாவது

களின் படைகளை ஈடுபடுத்துதல் அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன் பல்தேசியப் படைகளை ஈடுபடுத்தல் ஆகும். ஐரோப்பிய தலைநகரங்களில் இத்திட்டத்துக்கு நல்ல வரவேற்பிருக்கவில்லை. சனாதிபதி மிலோசேவிக் இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன பால்கன் நாடுகளில் அமைதி நிலவுவது சேர்பியாவின் கைகளிலேயே இருக்கின்றது.

நன்றி: புரன்லைன்

03 - 07 - 1992

# அமெ. சதியை முறியடிக்க ஈராக்கிய மக்கள் தயார்

(பாக்தாத்)

அமெரிக்க, ஸியோனிஸ சதியை முறியடிக்க ஈராக்கிய ஆயுதப்படையினரும் மக்களும் தயாராகவுள்ளதாக ஈராக் உப ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இதேவேளை குவைத்தை ஈராக் பிடித்து சரியாக இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகும் இவ்வேளையில் மேற்கு நாடுகளுக்கு எதிராகக் கடும்போக்கைக் கடைப்பிடிக்க ஈராக் தலைவர்கள் உறுதி கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பாத் சோஷலிசக் கட்சி கூட்டமொன்றில் உரையாற்றிய ஜனாப் காஹா யாஸீன் ரம்ழான் சகலயுத்தங்களின் அன்னை என வர்ணிக்கப்படும் வளைகுடா யுத்தம் தொடர்கிறது எனக் கூறியுள்ளார். ஈராக்கின் கௌரவத்தையும் தேசிய இறைமையையும் மாசுபடுத்தும் நோக்கோடு மேற்கொள்ளப்படும் எந்த ஆக்கிரமிப்பையோ அல்லது புதிய தீர்மானத்தையோ எதிர்கொள்ள ஈராக் நிலைப்பாடு மேலும் வலுவானதாகவும் உறுதியானதாகவும் இருப்பதாக அவர் கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய ஈராக் பாதுகாப்பு அமைச்சர் அலிஹஸன் மஜீத் ஒவ்வொரு ஈராக்கியருக்கும் தமது தாயகத்தைப்பாதுகாக்கும் உரிமையுண்டு எனக் கூறியுள்ளார்.

மேலும்எந்தக் காலத்தையும் விட இப்போது எமதுமக்களும் ஆயுதப்படையினரும் நன்கு தயார்நிலையில் இருப்பதுடன் எமது தாயகத்துக்கெதிரான ஏகாதிபத்திய ஸியோனிஸ சதி முயற்சிகளை முறியடித்து எழுந்து நிற்கக்கூடிய சக்திவாய்ந்தவர்களாக நாம் இன்றிருக்கின்றோம் என்றும் அவர்கூறினார்

இதேவேளை குவைத்திற்கு மேலும் 2400 துருப்புக்களை அனுப்பப்போவதாக வாஷிங்டன் வெள்ளியன்று அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# உத்தரப் பிரதேசத்திற்கு 40 கம்பனி பரா இராணுவம்

(டில்லி)

உத்தரப் பிரதேசத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும், தீவிரவாதிகளின் பிரச்சினையை எதிர்கொள்ளவும் மாநில அரசுக்கு மத்திய அரசு பூரண ஒத்துழைப்பை நல்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

கேள்வி நேரத்தின் போது ஜனதாதளத்தைச் சேர்ந்த எம்.பி.யான மோகன்சிங் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் நாற்பது கம்பனி பரா இராணுவத்தினர் நவீன ஆயுதங்களுடன் உத்தரப் பிரதேசத்திற்கு அனுப்பப்படுவர் என்றும் குறிப்பிட்டார்.

உத்தரப் பிரதேசத்தின் மாநில பொலிசாரையும், புலனாய்வு அமைப்புக்களையும் முன்கூட்டியே மத்திய அரசுக்கு தகவல் வழங்காமைக்காக மோகன்சிங் எம்.பி.குற்றம் சாட்டினார்.

இவ் விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசிய பாரதீயஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி உத்தரப் பிரதேச அரசு மேலதிக பொலிசாரையும், ஆயுதங்களையும் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன் உத்தரப்பிரதேசத்தில் வன்முறை அதிகரிப்பது தொடர்பாக நேபாள அரசுடன் பேசப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்

# 42 வர்த்தகர்களுக்கு ஈராக்கில் மரணதண்டனை

(பாக்தாத்)

ஈராக்கில் பொருள்களை பதுக்கிப் பாவனையாளர்களைச் சூறையாடிய 42 வர்த்தகர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 550 வர்த்தகர்கள் சிறையில் போடப்பட்டுள்ளனர் இவர்களின் உணவுப் பண்டக சாலைகள் விற்பனை நிலையங்கள் யாவும் அரசால் சுவீகரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சாமான்களைப் பதுக்கி மக்களை ஏமாற்றிப் பணம் சம்பாதிப்பவர்கள் சட்டத்தின் பிடியில் கொண்டுவரப்பட்டு மரண தண்டனைக்குட்படுத்தப்படுவார்கள் என்று ஈராக்கிய ஜனாதிபதி சதாம்குசைன் வர்த்தகர்களுக்குஎச்சரித்திருந்தார்.

1990 ஆம் ஆண்டில் ஐ நா. வர்த்தகத் தடை விதித்த போது உணவுப் பொருள்களைப் பதுக்க வேண்டாமென்றும், நியாயமான விலைக்கு மக்களுக்கு பொருள்களை விற்க வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

# ஈழநாதம்

## கண்காட்சி

வடமாகாணப் புற்றுநோய்த்தடுப்புச் சங்கத்தினால் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவ காலத்தில் இந்து விடுதிக்குத் தெற்குப்புறமாகப் புற்றுநோய் சம்பந்தமான தகவல் நிலையம் ஒன்று நாளை (7-8-92) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு திறந்து வைக்கப்படஉள்ளது.

இந்நோய் தொடர்பான கண்காட்சி 7-8-92 தொடக்கம் 28-8-92 வரை காலை 6 00மணி தொடக்கம் மாலை 8.00 மணி வரை திறந்து வைக்கப்படவுள்ளது.

புற்றுநோய் சம்பந்தமாக மக்களை விழிப்புணர்ச்சி அடையச் செய்யும் இக் கண்காட்சியில் பொதுமக்கள் பங்கு கொண்டு உரிய பயனடையுமாறு வடமாகாண புற்றுநோய்த் தடுப்புச் சங்கத்தார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## நேர்முகப் பரீட்சை

பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் கணக்கு இலிகிதர், சஞ்சிகை உதவி ஆசிரியர் பதவிகட்கான நேர்முகப் பரீட்சை நாளை (07-08-92) மேற்படி ஒன்றியக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான கடிதங்கள் விண்ணப்பதாரிகட்குத் தபால் மூலம் சேர்க்கப்பட்டுள்ளன(06

## சேவை

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட கால்நடை வைத்தியப் பயிற்சி வகுப்பில் பயிற்சியினை முடித்துக் கொண்ட பயிற்சியாளர்கள் தற்போது கால்நடை வைத்திய சேவையினை மேற்கொண்டு வருகிறார்கள்.

பயிற்சியினை முடித்துக் கொண்ட பயிற்சியாளர்களால் 7,485 மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய்க்கு எச். எஸ் மருந்தும் 7,546 மாடுகளுக்கு கால்வாய் நோய்க்கு எவ். எம். டி மருந்தும், 465 கோழிகளுக்கு வெள்ளைக் கழிச்சல் நோய்க்கு றனிக்கட் மருந்தும் ஏற்றப்பட்டுள்ளன.

## அ.தி.மு.க. அரசிற்கெதிரான கிளர்ச்சியில்

# ஓர் இலட்சம் தி.மு.க. தொண்டர் சிறை செல்லத் தயார்

### -கருணாநிதி அறிவிப்பு

(சென்னை)

ஜெயலலிதா அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கைகளுக்கு எதிராக திராவிட முன்னேற்றக் கழகம் கிளர்ச்சிப் போராட்டம் ஒன்றை நடத்துவது தொடர்பாக விரைவில் முடிவுசெய்யும் என்றும், இப்போராட்டத்தின் போது ஓர் இலட்சம் பேர் சிறை செல்ல தயாராக இருப்பதாகவும் திருநெல்வேலியில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றிய மு. கருணாநிதி தெரிவித்தார்.

இக் கூட்டத்திற்கு செல்லும் வழியில் மதுரையில் செய்தியாளர்களைச் சந்தித்த மு. கருணாநிதி அனுதாப அலையினால் தாங்கள் இழைத்த தவறுகளை மக்கள் இப்போதுஉணரத்தொடங்கி இருப்பதாகவும், குறிப்பிட்டார். அத்துடன் கடந்த ஒருவருட காலத்தில் பொதுத்துறையில் ஊழலும், ஒழுங்கீனமும் மலிந்து போனதுடன் அரிசி விலையும் உயர்ந்து விட்டது. ஆளும் கட்சியின் அராஜகமும் அதிகரித்துவிட்டது என்றும் தெரிவித்தார்.

## யூகோ. தூதரகத்தை மூட சிறிலங்கா முடிவு

(கொழும்பு)

யூகோஸ்லாவியாவில் உள்ள இலங்கை தூதரகத்தை மூடிவிடவும், ஹங்கேரியிலும், ஹொலண்டிலும் புதிய இரு தூதரகங்களை திறப்பதற்கும் இலங்கை அரசு உயர்மட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யூகோஸ்லாவியாவில் தற்போது எழுந்துள்ள நெருக்கடி நிலைமை காரணமாக யூகோ தூதுவர் ஹங்கேரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டு அங்கு புதிய தூதரகம் ஒன்று திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதேவேளைஹொலண்டின் தலைநகர் அம்ஸ்டடாமிலும் இலங்கைத் தூதரகம் திறக்கப்படவுள்ளது.

டாக்கா,கன்பரா,பாக்தாத் சவுதி அரேபியா, நைரோபி ஆகிய நாடுகளுக்கான தூதுவர்களின் நியமனம் விரைவில் அறிவிக்கப்படவுள்ளதாகஎதிர்பார்க்கப்படுகிறது.

குடிவரவு, குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர்வோல்டர்பெர்னாண்டோ டாக்காவுக்கும்ஜெனரல் சிறில் ரணதுங்கா அவுஸ்திரேலியா கான்பராவுக்கும் தூதுவர்களாகசெல்லக்கூடும்என எதிர்பார்க்கப்படுகிறது.

## நாடக விழா

ஊரெழு கணேச வித்தியாசாலையின் பாடசாலை அபிவிருத்தி நிதிக்காக நாளை நாடக விழா ஒன்று நடைபெறவுள்ளது. கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரையின் தாளக்காவடி உட்பட நான்கு பிரபல நாடகக் குழுவினரின் நாடகங்கள் இடம் பெறும். கணேச வித்தியாசாலை மண்டபத்தில் நாளை வெள்ளிக் கிழமை இடம்பெறவுள்ளது.

## தமிழீழ ஆய்வு நிறுவனம் பெயர் மாற்றம்

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் துணை அமைப்புக்களின் ஒன்றாகச் செயற்பட்டு வரும் தமிழீழ ஆய்வு நிறுவனம்தமிழீழபொருண்மிய மேம்பாட்டுக்கழகம் [TAMIL EELAM ECONOMIC DEVELOPMENT ORGANISATION TEEDOR) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மேற்படி கழகத்தின் பொறுப்பாளர் ரவி அறிவித்துள்ளார்.

தமிழீழப் பொருள் வளங்களை இனம் கண்டு, ஆய்வு செய்து முடிவுப் பொருளாக்குவதிலும் உள்ளூர் உற்பத்தியைப் பெருக்குவதிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டிற்கான திட்டமிடல், சந்தைப்படுத்தல், தொழில் நுட்பம், பயிற்சி, வர்த்தகம் எனும் இன்னோரன்ன துறைகளில் வழிகாட்டும் நடவடிக்கையிலும் தமிழீழ ஆய்வு நிறுவனம் கடந்த காலத்தில் சேவையாற்றி வந்தது என்றும்,

தற்பொழுது இந் நிறுவனத்தின் பரப்பெல்லை தமிழீழத்திற்கான தனித்துவமான பொருண்மிய கட்டமைப்பை உருவாக்குவதாக இருக்கையில் கடந்த காலச் செயற்பாடுகளை துரித கதியில் விரிவாக்கம் செய்ய வேண்டியுள்ள இன்றைய நிலையில் இந்த நிறுவனத்திற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் எனும் பொருத்தமான தூய தமிழ்ப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் ரவி தெரிவித்துள்ளார்.

## சிறிலங்கா கடற்படையிடம் சிக்கிய

# தமிழக மீனவரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவும்

### - பாராளுமன்றத்தில் கோரிக்கை

சிறிலங்கா கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட ராமேஸ்வரத்தைச் சேர்ந்த இருபது மீனவர்களையும் விடுவிக்க மத்திய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நேற்றுப் பாராளுமன்றத்தின் இருசபைகளிலும் வலியுறுத்தப்பட்டது.

இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் கே. வி. தங்கபாலு, அ. இ. அ. திராவிடமுன்னேற்றக் கழக உறுப்பினர் பி ஜி. நாராயணன் ஆகியோர் பேரவையில்இந்தப் பிரச்சினையை எழுப்பினார்கள்.

இ திபமீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்டு வரும் அத்து மீறல் நடவடிக்கை குறித்து ராஜ்யசபாவில் அ. இ. அ. திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர் ராஜன் செல்லப்பா சிறப்பாகக் குறிப்பிட்டுப் பேசிய போது, உறுப்பினர்கள் பலரும் அவருடன் சேர்ந்து கொண்டு கவலை தெரிவித்தார்கள்.

இந்தியமீனவர்கள் சிறிலங்கா கடற்பிரதேசத்தில் அத்துமீறி நுழைந்தனரென்ற பொய்க் குற்றச்சாட்டின் பேரில், சிறைபிடிக்கப்பட்டுக்காவலில் வைக்கப்பட்ட பின்னர் சித்திரவதை செய்யப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

சில சமயங்களில் ராமேஸ்வர மீனவர்களின் படகை சிறிலங்கா கடற்படை தடுத்து நிறுத்திய பின்னர், மீனவர்களைக் கொன்று விட்டதாக திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் வை. கோபாலசாமி தெரிவித்தார்.

ஒப்பந்தத்தை சிறிலங்கா கடற்படை மீறி வருவதாகவும். இந்தப் பிரச்சினையை சிறிலங்கா அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்து, ராமேஸ்வர மீனவர்களைமீட்பதற்கான நடவடிக்கையை மத்திய அரசு எடுக்க வேண்டும் என்று லோக் சபாவில் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் கே. வி. தங்கபாலுவும், அ.இ.அ. திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பி. ஜி. நாராயணனும் கேட்டுக் கொண்டார்கள்.

### வாராந்தம்

பிடிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை, அகதிகளைத் திரும்பி அனுப்பும் இந்திய அரசின் திட்டத்தில் முதல் முறையாக அகதிகளுக்கான ஐ நா. உயர் ஸ்தானிகராலயத்தின் தொடர்பு தமிழ்

## முன்னாள் ஜனாதிபதி

# தங்குமிட வசதிக்கு 1கோடி 75 லட்சம் செலவீடு

(சென்னை)

முன்னாள் குடியரசுத்தலைவர் ஆர். வெங்கட்ராமனுக்கு சென்னையில் வீடு ஒன்றைக் கொடுப்பதற்காக தமிழ்நாடு மாநில அரசு சுமார் ஒரு கோடியே எழுபத்தைந்து லட்சம் ரூபாவரை செலவிட்டுள்ளது.என்று திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணிகூறிபுள்ளார்.

பதவியைத் துறந்த பின்னர் வசிப்பதற்காக சென்னை கோட்டூர் புரம் பகுதியிலுள்ள அவரது வீட்டை வசதியுள்ளதாக்க தமிழக அரசு சுமார் எழுபத்தைந்து லட்சம் ரூபா வரை செலவிட்டது என்றும் ஆனால் அவ்வீட்டில் வசிக்க வெங்கட்ராமன் விரும்பாததை அடுத்து சென்னைகிறின்வெஸ் சாலையில் ஒரு வீட்டிற்கு சுமார் ஒரு கோடி ரூபாவரை தமிழக அரசு செலவிட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

இது பற்றி வீரமணி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தபோதும் நாட்டின் உயர் பதவியை வகித்த ஒருவருக்கு பாதுகாப்பு வழங்குவதில் மாநில அரசின் செயலுக்கு ஒரு தடையும் விதிக்க முடியாது என்று நீதிமன்றம் கூறிவிட்டது.

## குவைத் ஈராக்கின் பகுதியே மீண்டும் வற்புறுத்து

குவைத் வரலாற்று ரீதியாக ஈராக்கின் ஒரு பகுதியே என்று ஈராக் மீண்டும் வலியுறுத்தி உள்ளது. ஹெயீக் நகரில் நேற்று முன்தினம் ஈராக் பிரதிநிதி ஒருவர் இதனை அறிவித்தார்.

இதனிடையே வளைகுடாப் பகுதியில் அமெரிக்கப்படைகள் நேற்று முன்தினம் பயிற்சி நடவடிக்கைகளை ஆரம்பித்ததையடுத்து பதற்றம் அதிகரித்துள்ளது ஐயாயிரத்திற்கும் அதிகமான துருப்புகள் இப் பயிற்சியில் கலந்து கொண்டுள்ளனர்.

## சிறந்த சட்டங்கள் உண்டு; அமுலாக்குவதே சிரமமாம்

(கொழும்பு)

உலகிலுள்ள அரசமைப்பு சட்டங்களில் இலங்கையிலேயேசிறந்தஅரசுஅமைப்புசட்டம் இருக்கிறது என்று அமைச்சர் செல்லச்சாமி தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் தமிழ் மொழி அமுலாக்கல், தொழிற்சங்க சட்டங்கள் என்பவற்றை பொறுத்தவரை சிறந்த சட்டங்கள் உண்டு ஆனால் அவற்றை அமுல் நடத்துவதிலேயே சிக்கல்கள் எழுகின்றன என்று தெரிவித்தார்.

### வடக்கு

இதேவேளை வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கான கல்விப் பணிப்பாளர் பதவி கடந்த ஒருவருடத்திற்கு மேலாக நிரப்பப்படாமல் இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

### 1ஆம் தர அதிபர்

திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் கல்விப் பணிப்பாளரின் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்ட அதிபர்களின் விபரம் வருமாறு;

பி. கமலநாதன் - யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை. கே. அம்பலவாணர் - கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி, என். பரமசிவம் - வியாவில் சைவத் தமிழ் ம. வி., பீ. முத்துலிங்கம் - கைதடி முத்துக்குமார

## திருடமுயன்றவர் கைது

(நல்லூர்)

நல்லூர் ஆலயப் பகுதியில் சங்கிலி திருட முயன்ற பெண் ஒருவர் தமிழீழ காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

### தடுத்து

பலித்துள்ளது.

[illegible] சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமைகள் மீறல் மீதான மனுவை விசாரித்த மூன்று நீதிபதிகள் கொண்ட பெஞ்ச் மேற்படி தீர்ப்பை வழங்கியுள்ளது

மனுதார் அவசரகாலச் சட்டம் 17 (1) இன் கீழ் தடுத்து வைக்கப்பட்டார் என்றாலும், அவர் மீது குற்றப் பத்திரிகை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்று மனுதார் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் சங்கத்தைச் சேர்ந்த ஆர். கே. பி.பெரேரா வாதிட்டார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து தடுப்புக் காவல் கட்டளையைப் பெறத் தான் எடுத்த முயற்சிகள் பயனளிக்க

களைக் கொன்று விட்டதாக திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் வை. கோபால சாமி தெரிவித்தார்.

இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாதபடி நடவடிக்கை எடுக்கும்படி அ. இ. அ. திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் விராஜன் செல்லப்பா அரசைக் கேட்டுக் கொண்டார்.

1974இல் இந்திய-சிறிலங்கா அரசுகளுக்கிடையில் ஏற்பட்ட

முறையாக அகதிகளுக்கான ஐ நா. உயர் ஸ்தானிகராலயத்தின் தொடர்பு தமிழ் நாட்டில் ஏற்படுத்தியுள்ளது.

இந்திய அரசு இலங்கைத் தமிழ் அகதிகளை வலுக் கட்டாயமாக வெளியேற்ற முடியாது. வற்புறுத்தலின் பேரில் இந்திய அரசு அதிகாரிகள் இலங்கைத் தமிழ் அகதிகளை அப்புறப்படுத்த முயற்சித்தால் அகதிகளுக்கான ஐ நா. உயர் ஸ்தானிகராலயம் அகதிகள் சார்பில் தலையிடும் நிலை இப்போது உருவாகியுள்ளது

விக்னேஸ்வரா கல்லூரி, என். பரமசிவம் - வியாவில் சைவத் தமிழ் ம. வி., பீ. முத்துலிங்கம் - கைதடி முத்துக்குமார சாமி ம. வி., என். வரதராஜா - நெல்லியடி ம. ம. வி., ஐ. வரதராஜா- எழுதுமட்டுவாள் கணேசா வித்., பீ. கந்தசாமி - மானிப்பாய் இந்துக்கல்லூரி, எம். பாலசுப்பிரமணியம் - மீசாலை வீரசிங்கம் ம. வி., ஏ. கயிலாயபிள்ளை - கிளாலி றோ. க. வித், கே. வீரசிங்கம் - சாவகச்சேரி மகளிர் ம. வி., என். சிவசோதி - கைதடி முத்துக்குமாரசாமி ம வி., எஸ் விசுவலிங்கம் - ஆனைக்கோட்டை றோ. க. த. க. வி., கே. பேரின்பநாயகம்-மண்டைதீவு ம. வி., ஆர். ஞானசேகரம் பிள்ளை - நெல்லியடி ம. ம. வி., எஸ். ஜெயவீரசிங்கம் - மானிப்பாய் இந்து கல்லூரி, என். தர்மபாலன் - புங்குடுதீவு ம. வி., எஸ். சிந்திரவடிவேல் - சிதம்பரா கல்லூரி வல்வெட்டித்துறை, பீ. பெனடிக்ற் - மாரீசன்கூடல் றோ. க. வி., ரீ. செல்லத்துரை - வைத்தீஸ்வரா வி., ஏ. சண்முகநாதன் அல்லைப்பிட்டி பராசக்தி வித்., என். ஸ்ரீபதி திரு இருதயக் கல்லூரி கரவெட்டி.

ளிடமிருந்து தடுப்புக் காவல் கட்டளையைப் பெறத் தான் எடுத்த முயற்சிகள் பயனளிக்க வில்லை என்று அரசு தரப்பு வழக்கறிஞர் கூறினார்.

## பொலிஸ்

பொலிசார் இராணுவத்திலிருந்து தப்பியோடிய ஒருவரைக் கைது செய்திருப்பதாகவும் தெரியவருகிறது கைதான இராணுவத்தைச் சேர்ந்தவரிடமிருந்து கான்ஸ்டபிள் வைத்திருந்த ரி 56 ரகத் துப்பாக்கியும் பொலிசாரால் மீட்கப் பட்டுள்ளது.

## சுதந்திரக்

தீர்வு சம்பந்தமான அதன் திட்டங்களை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக் கட்சி அதன் தனித்துவத்தைப் பேணும்அதேவேளையில் பிரதான அரசியல் கட்சிகளுடன் தேர்தல் ஒப்பந்தம் செய்து கொள்ளும் என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## மன்னாரில்

பிடத்தக்கது.


48 மணி நேரத்திற்குள் புலிகள் மேற்கொண்ட மூன்றாவது வெற்றிகரமான தாக்குதல் இதுவாகும். இந்த மூன்று தாக்குதலிலும் மொத்தம் 34 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

## தகவலில்லாது

படல் வேண்டும் எனவும், இக் குழந்தைகளின் வாழ்வுக்காக திட்டமிட்டுச் செயலாற்ற முன்வருகின்ற அனைத்து தரப்பினரோடும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இணைந்து செயல்பட ஆர்வம் கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது

மேலும் போஷாக்கு நிலையில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான போஷாக்கு புனர்வாழ்வு நிலையம் ஒன்றையும் புனர்வாழ்வுக்கழகம் ஆரம்பித்துள்ளது.


# "இசைமாலை"



நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இசைமாலை நிகழ்ச்சிநிரல்

| இடம் | திகதி |
|---|---|
| 1. ஸ்கந்தவரோதயாக் கல்லூரி கந்தரோடை | 6.8.92 |
| 2. இராமநாதன் கல்லூரி மருதனார்மடம் | 7.8.92 |
| 3. சென்ஜோன்ஸ் கல்லூரி சுண்டுக்குளி | 9.8.92 |
| 4. மத்திய கல்லூரி நெல்லியடி | 10.8.92 |
| 5. அம்மன் கோவில் வல்வெட்டித்துறை | 11.8.92 |
| 6. பஸ் நிலையம் பருத்தித்துறை | 12.8.92 |
| 7. திருநாவுக்கரசு வித்தியாலயம் கொடிகாமம் | 15.8.92 |
| 8. இந்துக் கல்லூரி சாவகச்சேரி | 16.8.92 |

தினமும் மாலை 8.30 மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பமாகும்.

**நுழைவுச் சீட்டு: ரூபா 10/-**

மேலதிகமான உங்கள் அன்பளிப்புகள் நுழைவாயிலில் ஏற்றுக் கொள்ளப்படும்.

- செஞ்சோலை நிர்வாகத்தினர்

(சி/4828)


## மரண அறிவித்தல்

## திரு. பத்தலோமையோசேப்பு

(இளைப்பாறிய விவசாய விசாலிப்பு சேவையாளர்)

திரு. பத்தலோமையோசேப்பு இளைப்பாறிய விவசாய விசாலிப்பு சேவையாளர் 4-8-92 இல் காலமானார். அன்னார் திருமதி மே. மி. யோசேப்பு (இளைப்பாறிய அதிபர் மிருசுவில் றோ. க. த. பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும் றெசில்டா (கனடா), றொபின்சன் (ஜேர்மனி), நிமில்டா (சென் அன்ரனிஸ் ம. வி கொள்ளுப்பிட்டி), கசில்டா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்ரன் (கனடா), மித்திரா (ஜேர்மனி), நிறஞ்சன் (றிச்சேட் பீரிஸ் கொழும்பு), கிறேசியன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் யூலி, லக்ஷிகா ஆகியோரின் பாட்டனாரும் ஆவர்.

ஈமக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப் படும்.

தகவல்:

ஜீவோதயம்
கண்டி வீதி,
மிருசுவில். (2968)

திருமதி சூசை மரியதாசன்
(மைத்துனி)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**05-08-1992**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5140

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்

42-6452, 27-5482, 27-4435, 28-9037, 41-5583, 27-3927, 42-2364, 43-1019, 24-8785, 24-6858, 22-6691, 28-9449, 26-5178, 26-8674.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:

26-2277, 26-4990, 22-8176, 24-0521, 26-3392, 42-3726, 26 4657, 26-535, 24-5145, 22-2087, 27-9779, 36-6925, 31-1731, 25-9869.